அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

33 T I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

First Term Test - Grade 13- 2018

சுட்டெண் : ....

கணக்கீடு I
Accounting I

காலம் : 2 மணி

- **01 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை இனங்கண்டு அருகிலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**
- **31 – 50 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை உரிய இடைவெளிகளில் எழுதுக.**

01. நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கு அமைய பொது நோக்க நிதிக்கூற்றுக்களின் நோக்கமாக அமைவது,

1. கணக்கீட்டு அலகொன்றின் மீது அக்கறை செலுத்தும் சகல கட்சியினருக்கும் அதன் நிதிப்பெறுபேறு, நிதிநிலமை, காசுப்பாய்ச்சல் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
2. கணக்கீட்டு அலகொன்றின் முகாமையாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் என்பவற்றிற்கு அவசியமான கடந்தகால, முன்மதிப்பீட்டு தகவல்களை வழங்குதல்.
3. கணக்கீட்டு அலகொன்றில் தற்போதுள்ள மற்றும் எதிர்கால முதலீட்டாளர், கடன் வழங்குவோர் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர்களுக்கும் நிறுவனத்திற்கு தேவையான வளங்களை வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான நிதித்தகவல்களை வழங்குதல்.
4. கணக்கீட்டு அலகொன்றின் மீது அக்கறை செலுத்தும் அனைத்து வெளியக கட்சியினருக்கும் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான நிதிசார், நிதிசாரா தகவல்களை வழங்குதல்.
5. கணக்கீட்டு அலகொன்றின் முதலீட்டாளர்களுக்கும், அரசுக்கும் தேவையான நிதிசார், நிதிசாரா, தகவல்களை வழங்குதல் (.......)

02. வணிகமொன்றிற்கு சொந்தமான சகல நடைமுறை அல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதியை மிக நுட்பமாக பதிவிடுவதற்காக அதன் நடைமுறை சந்தைப்பெறுமதியை புத்தகங்களில் பதிவதால் மீறப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு,

1. தொடர்ந்து செல் 2. வரலாற்றுக் கிரயம் 3. அட்டுரு
4. தேறல் 5. கால அளவீடு (.......)

03. நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடும் போது அடிப்படை எடுகோளாக கருதப்படுவது,

1. அட்டுரு, தொடர்ந்துசெல் 2. அட்டுரு 3. கொள்கை மாறா, அட்டுரு
4.. தொடர்ந்து செல் 5. கொள்கை மாறா, தொடர்ந்து செல் (.......)

04. தகவல்களை பயன்படுத்தும் கட்சியினர்களின் தீர்மானங்களை மாற்றக்கூடிய இயலுமை நிதிக்கூற்றுத் தகவல்களுக்கு காணப்படுவது, கணக்கீட்டின் எப் பண்புசார் குணாதிசயம் காரணமாக,

1. காலத்திற்கு ஏற்ற தன்மை
2. சான்றுபடுத்தக்கூடிய தன்மை
3. ஒப்பீட்டுத் தன்மை
4. நம்பகரமான பிரதிநிதித்துவம்
5. பொருத்தமான தன்மை (.......)

05. நிறுவனமொன்றின் இயந்திர பழுதுபார்த்தலுக்காக ரூ. 80,000 செலுத்தப்பட்டது. இக்கொடுக்கல் வாங்களினால் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படும் தாக்கமாக அமைவது,

1. சொத்துக்கள் ரூ. 80,000 அதிகரித்து உரிமை ரூ. 80,000 குறைவடையும்.
2. ரூ. 80,000 வினால் சொத்துக்கள் அதிகரித்து, ரூ. 80,000 வினால் குறைவடையும்.
3. சொத்துக்கள் ரூ. 80,000 குறைவடைந்து பொறுப்புக்களும் ரூ. 80,000 குறைவடையும்.
4. சொத்துக்கள் ரூ. 80,000 அதிகரித்து, உரிமையும் ரூ. 80,000 அதிகரிக்கும்.
5. சொத்துக்கள் ரூ. 80,000 அதிகரித்து, பொறுப்புக்களும் ரூ. 80,000 அதிகரிக்கும். (.......)

06. வரையறுக்கப்பட்ட "தரிந்து" பொதுக்கம்பனியின் 2018.03.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசமானது தொங்கல் கணக்கில் பதியப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் அடையாளம் காணப்பட்டன.

A - வெளித்திரும்பல் நாளேட்டின் VAT நிரலின் மொத்தம் ரூ. 500 வினால் மிகையாக கூட்டப்பட்டிருந்தது.

B - காசுப்பெறுவனவு நாளேட்டில் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு பகுப்பாய்வு நிரலின் மொத்தம் ரூ. 70,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

C - காப்புறுதி கட்டணம் செலுத்தியது ரூ. 35,000 காசு கட்டுப்பாட்டுக் கணக்கில்மட்டுமே பதியப்பட்டிருந்தது.

D - காசுக் கொடுப்பனவு நாளேட்டில் கழிவு நிரலின் மொத்தம் ரூ. 8000 கொடுத்த கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட வழுக்களில் தொங்கல் கணக்கு மீதி உருவாவதில் தாக்கம் செலுத்துவது,

1. A ,B மட்டும் 2. A, C மட்டும் 3 B மட்டும்
4. B , C மட்டும் 5. B,C, D மட்டும் (.......)

07. வணிகமொன்றில் ரூ. 150,000 விற்கு பொருட்கள் 10% வியாபார கழிவுடன் கடனுக்கு விற்கப்பட்டன. மேலும் காசு பெறப்படும் போது 2% காசுக் கழிவு அனுமதிக்கப்பட்டது. இக் கொடுக்கல் வாங்களின் மூலம் விற்பனை கணக்கிலும் கொடுத்த கழிவுக் கணக்கிலும் பதியப்பட வேண்டிய பெறுமதிகளாவன,

	விற்பனை க/கு (ரூ)	கொடுத்த கழிவுத் க/கு (ரூ)
1.	132,000	1,640
2.	132,000	2,700
3.	135,000	1,640
4.	135,000	2,700
5.	150,000	3,000

(.......)

08. வரையறுக்கப்பட்ட அசோக் பொது கம்பனியானது பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். 2017.04.01ல் (VAT) பொறுப்பு ரூ. 30,000 ஆகும். 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான 15% (VAT) உள்ளடங்களான விற்பனை ரூ. 920,000 ஆகவும் கொள்வனவு ரூ. 690,000 ஆகவும் காணப்பட்டது. ஆண்டுக்காலத்தில் செலுத்திய (VAT) ரூ. 30,000 ஆகும்.
2018.03.31ல் நிதிநிலமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய VAT பொறுப்பு,

1. ரூ. 30,000 2. ரூ. 60,000 3. ரூ. 90,000 4. ரூ. 120,000 5. ரூ. 150,000 (.......)

09. வணிகமொன்று 2015.04.01 இல் ரூ. 1,000,000 பெறுமதியான இயந்திரம் ஒன்றினை கையகப்படுத்திக் கொண்டது. அதன் பயனுள்ள ஆயுட்காலம் 5 வருடங்களாகும். முதல் இரு வருடங்களுக்குமான அதன் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு மீதி ரூ. 320,000 ஆகும். 2018.04.01 ல் இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு மதிப்பு எவ்வளவு?

1. ரூ. 320,000 2. ரூ. 480,000 3. ரூ. 600,000 4. ரூ. 640,000 5. ரூ. 800,000 (.......)

- **வினா இலக்கம் 10,11 ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக. அலங்கார, மலர்ச்சாடி உற்பத்தி வியாபாரத்தில் ஈடுபடும் "மல்ஷான்" வியாபாரத்தின் 2018 ஜூலை மாத தரவுகள் பின்வருமாறு :**

	(ரூ)
2018.07.01 முதல் 2018.07.31 வரை மூலப்பொருள் இருப்பு அதிகரிப்பு	60,000
2018.07.01 முதல் 2018.07.31 வரை குறைவேலை இருப்பு அதிகரிப்பு	20,000
மூலப்பொருள் கொள்வனவு	300,000
நேர் கூலிக் கிரயம்	150,000
மின் சக்தி	20,000
மேற்பார்வையாளர் சம்பளம்	50,000
இயந்திர தேய்வு	10,000
விற்பனை	650,000
விற்பனை செலவு	40,000

2018.07.01 இலும் 2018.07.31 இலும் முடிவுப்பொருள் இருப்பு எதுவும் இல்லை. குறைவேலையானது உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்படுகிறது.

10. 2018 ஜுலை மாதத்திற்காக மூலக் கிரயமும் உற்பத்தி பொது மேந்தலை கிரயமும்,

	மூலக்கிரயம் (ரூ)	உற்பத்தி பொது மேந்தலை கிரயம் (ரூ)
1.	360,000	60,000
2.	390,000	80,000
3.	450,000	70,000
4.	470,000	80,000
5.	530,000	120,000

(.......)

11. 2018 ஜுலை மாதத்திற்கான மொத்த இலாபமாக அமைவது,
1. ரூ. 50,000 2. ரூ. 60,000 3. ரூ. 100,000 4. ரூ. 150,000 5. ரூ. 200,000 (.......)

12. 2018 03.31 இல் முடிவடைந்த ஆண்டின் இறுதி இருப்பானது பிழையாக ரூ. 150,000 குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 2018.03.31ல் முடிவடைந்த ஆண்டுக்கான விற்பனை கிரயம் மற்றும் தேறிய இலாபம் என்பவற்றில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்?

	விற்பனைக் கிரயம்	தேறிய இலாபம்
1.	குறைவாகவும்	குறைவாகவும்
2.	மிகையாக	மிகையாக
3.	மிகையாக	குறைவாக
4.	குறைவாக	மாற்றமில்லை
5.	மாற்றமில்லை	குறைவாக

(.......)

- **13, 14 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தரவுகளை பயன்படுத்துக.**

2018.03.31 இல் வியாபாரத்தில் ஏற்பட்ட தீயினால் இறுதி இருப்பின் $\frac{1}{3}$ பகுதி தவிர ஏனையவை முழுமையாக அழிவுற்றது. மேலும் ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

2017.4.1 இல் இருப்பு	ரூ. 340,000
கொள்வனவுகள்	ரூ. 1,220,000
தீயழிவிலிருந்து பாதுகாக்கப்பட்ட இருப்பு	ரூ. 120,000

- இருப்புக்கள் காப்புறுதி செய்யயப்பட்டிருந்ததால், இழப்புக்களில் 50% இனை காப்புறுதி நிறுவனம் தர ஒப்புக் கொண்டது.
- வியாபாரமானது விற்பனையில் 40% மொத்த இலாபம் வைத்து பொருள்களை விற்பனை செய்கிறது.

13. தீயினால் அழிவுற்ற சரக்கின் கிரயமும் காலப்பகுதிக்கான விற்பனை பெறுமதியும் எவ்வளவு.

	தீயினால் அழிவுற்ற சரக்கின் பெறுமதி (ரூ)	விற்பனை (ரூ)
1.	240,000	2,000,000
2.	240,000	2,800,000
3.	360,000	2,000,000
4.	360,000	1,200,000
5.	360,000	1,560,000

(.......)

14. 2018.03.31 ல் நிதிநிலமை கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காட்ட வேண்டிய இறுதி இருப்பும் பெற வேண்டிய காப்புறுதியும்,

	இறுதி இருப்பு (ரூ)	பெறவேண்டிய காப்பறுதி இழப்பீடு (ரூ)
1.	120,000	60,000
2.	120,000	120,000
3.	240,000	120,000
4.	240,000	180,000
5.	240,000	240,000

(.......)

- **15 ஆம் 16ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களால் 2015.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட நலன்புரிச் சங்கமொன்றின் அங்கத்துவ கட்டணம் தொடர்பானவை.

விபரம்	2018.03.31 (ரூ)	2017.03.31 (ரூ)
அட்டுரு அங்கத்துவ கட்டணம்	30,000	25,000
முற்பண அங்கத்துவ கட்டணம்	15,000	10,000
ஆயுள் சந்தா கணக்கு மீதி	?	80,000

- ஆயுள் அங்கத்துவ கட்டணமானது 2015.04.01 இலிருந்து 10 வருடங்களில் வருமானமாக பதிவழிக்கப்படும். ஆயுள் அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய, அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2017.04.01 இல் 100 ஆகும். அவர்களின் மாதாந்த அங்கத்துவ கட்டணம் ரூ. 250 ஆகும்.

15. 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் காசாக பெற்ற சந்தாவும் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய சந்தா வருமானமும்,

	காசாக பெற்ற சந்தா (ரூ)	வருமானமாக காட்டவேண்டிய சந்தா (ரூ)
1.	25,000	105,000
2.	105,000	105,000
3.	300,000	300,000
4.	300,000	310,000
5.	380,000	310,000

(.......)

16. 2018.03.31 இல் ஆயுள் அங்கத்துவ கட்டண கணக்கு மீதியாவது,
1. ரூ. 60,000   2. ரூ. 70,000   3. ரூ. 80,000
4. ரூ. 90,000   5. ரூ. 100,000   (.......)

- **வினா இல. 17,18 ஆகியவற்றிற்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் 2018 மார்ச் மாதத்தில் பெறப்பட்ட வியாபாரமொன்றின் இருப்பு தொடர்பானவை.

திகதி	விபரம்	அளவு (அலகுகள்)	ஓரலகின் கிரயம் ரூ.
2018.03.01	மீதி	2000	50
2018.03.22	கொள்வனவு	6000	70
2018.03.30	விற்பனை	4000	

- இருப்பு மதிப்பீட்டிற்காக FIFO முறை பயன்படுத்தப்படுகிறது. அலகொன்றின் விற்பனை விலை ரூ. 80 ஆகும். 2018.03.31ல் இருப்புக்களில் அலகொன்றின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ. 75 ஆகும்.

17. LKAS 02 (இருப்பு) நியமத்திற்கமைய இருப்பின் கிரயமும் நிதி நிலமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய இருப்பின் பெறுமதியும்,

	கிரயம் (ரூ. 000)	நிதி நிலமை கூற்றில் காட்டப்படவேண்டிய இருப்பு (ரூ.000)
1.	200	200
2.	280	280
3.	300	280
4.	420	280
5.	450	300

(.......)

18. 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த இலாபம் எவ்வளவு? (ரூ. 000)
1. 20   2. 40   3. 80   4. 100   5. 120   (.......)

- **19, 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஹிருவும் சந்துவும் இலாபநட்டங்களை 3: 2 என பகிர்ந்து செல்லும் பங்குடமை வியாபாரத்தில் 2018.03.31 இல் $\frac{1}{6}$ இலாபப்பங்குடன் தரு என்பவர் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார். அத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 600,000 என மதிப்பிடப்பட்டு பங்காளர் மூலதன கணக்கினூடாக சீராக்கப்படும்.

19. ஹிரு, சந்து, தரு பங்குடமையின் புதிய இலாப நட்ட விகிதம் முறையே,
1. 1:1:1   2. 2:2:1   3 3:1:2   4. 2:3:1   5. 3:2:1   (.......)

20. 2018.03.31 ல் ஹிரு, சந்து ஆகியோரின் மூலதன கணக்கு மீதியில் நன்மதிப்பு சீராக்கம் எவ்வாறு தாக்கமடையச் செய்யும்.

	ஹிரு (ரூ)	சந்து (ரூ)
1.	40,000 குறைவடையும்	60,000 குறைவடையும்
2.	40,000 அதிகரிக்கும்.	60,000 அதிகரிக்கும்.
3.	60,000 அதிகரிக்கும்.	40,000 குறைவடையும்
4.	40,000 குறைவடையும்	60,000 அதிகரிக்கும்.
5.	60,000 அதிகரிக்கும்.	40,000 அதிகரிக்கும்.

(.......)

21. இலாப நட்டங்களை சமமாக பகிரும் லால், நிஹால், சுனில் பங்குடமை வியாபாரத்திலிருந்து 2018.03.31 இல் "லால்" இளைப்பாறினார். அன்றைய தின நன்மதிப்பானது மூலதன கணக்கினூடாக சீராக்கப்பட்டது. ஏனையோர் பங்குடமையை தொடர்ந்து நடாத்திச் சென்றனர்.

	மூலதன கணக்கு மீதி	நிஹால் ரூ	சுனில் ரூ
1.	நன்மதிப்பு சீராக்கத்திற்கு முன்	500,000	375,000
2.	நன்மதிப்பு சீராக்கத்திற்கு பின்	400,000	350,000

பங்காளர்கள் இணங்கிக் கொண்ட மொத்த நன்மதிப்புத் தொகை எவ்வளவு?

1. ரூ. 300,000 2. ரூ. 375,000 3. ரூ. 400,000 4. ரூ. 450,000 5. ரூ. 500,000 (.......)

22. பங்குடமை வியாபாரம் தொடர்பான சில கூற்றுக்கள் வறுமாறு,

A - நன்மதிப்பானது மூலதன கணக்கினூடாக சீராக்கப்படும் போது பங்குடமையின் மொத்த உரிமை மாற்றமடையாது.

B - 2007 ஆம் ஆண்டு கம்பனி சட்டப்படி பங்குடமை வியாபாரத்தின் உச்ச பங்காளர் எண்ணிக்கை 50 பேர் ஆகும்.

C - பங்காளர் மூலதனத்திற்கு மேலதிகமாக வழங்கும் கடன்களுக்கு 1890 ஆம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் 24 ஆம் சரத்துக்கு அமைய 5% வட்டி வழங்கப்பட வேண்டும்.

D - பங்குடமை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், பங்காளர் முகாமை செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் பெறப்படும் நன்மை இலாபப் பங்காகும்.

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் பங்குடமை வியாபாரம் தொடர்பாக சரியான கூற்றுக்களை உள்ளடக்கிய தொகுதி,

1. A, B மட்டும் 2. A,B, C மட்டும் 3 A,C மட்டும்
4. B,C மட்டும் 5. A, C, D மட்டும் (.......)

23. வரையறுக்கப்பட்ட "பிரமிட்" பொதுக் கம்பனியின் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018.06.15 இல் இயக்குனர்களால் அனுமதிக்கப்பட்டது. 2018.03.31 தொடக்கம் 2018.06.15 வரையான காலப்பகுதியினுள் இடம்பெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு,

A - 2018.04.10 இல் கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்த கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்ததாக 2018.05.20 இல் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

B - 2018.05.20 இல் வியாபாரத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் 2018.03.31 இல் உள்ள இருப்புக்கள் முழுமையாக அழிவடைந்தது.

C - 2018.03.01 இல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர் ஒருவர் நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் இழப்பீடு வழங்க நேரிடும் என நம்பகரமான முறையில் வியாபாரத்தின் வழக்கறிஞர் கூறினார்.

D - 2018.03.31 ல் காணப்பட்ட கம்பனிக்கு சொந்தமான இடமொன்றை பாதை விஸ்தரிப்பிற்காக கையேற்கப்படுவதாக அறிவித்து 2018.06.01 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

LKAS 10 (அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வு) நியமத்திற்கு அமைய 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளில் எது /எவை சீராக்கப்பட வேண்டிய நிகழ்வுகளாக கருதப்படும்?

1. A, B மட்டும் 2. A,B,C மட்டும் 3 A,B,C, D மட்டும்
4. B, D மட்டும் 5. C மட்டும் (.......)

24. கம்பனியொன்றின் இயக்குனர் சபை நிதியாண்டின் இறுதியில் உள்ள பங்குதாரர்களுக்கு பங்கிலாபம் வழங்குவதற்கு தீர்மானித்தது. இதனால் நிதிநிலமை கூற்றில் சொத்துக்கள், உரிமை என்பவற்றீல் ஏற்படும் தாக்கத்தை காட்டும் தொகுதி.

	சொத்துக்களில் ஏற்படுத்தும் தாக்கம்	உரிமையில் ஏற்படுத்தும் தாக்கம்.
1.	குறைவடையும்	அதிகரிக்கும்
2.	குறைவடையும்	மாற்றமடையாது
3.	மாற்றமடையாது	மாற்றமடையாது
4.	மாற்றமடையாது	அதிகரிக்கும்
5.	அதிகரிக்கும்	அதிகரிக்கும்

(.......)

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 25, 26 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.**

கம்பனியொன்றில் 2017.03.31 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதன கணக்கு மீதி ரூ. 3,000,000 ஆகும். இவை பங்கொன்று ரூ. 15 படி வழங்கப்பட்டவை ஆகும். 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் 2017.03.31 இல் காணப்பட்ட 4 சாதாரண பங்குகளுக்கு 1 பங்கு என்ற அடிப்படையில் ஒரு பங்கு ரூ. 25 படி உரிமை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. உரிமை வழங்களில் 80% இனை தற்போதுள்ள பங்குதாரர்கள் கொள்வனவு செய்துள்ளனர்.

25. 2018.03.31 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதன கணக்கு மீதி எவ்வளவு?

1. ரூ. 4,000,000   2. ரூ. 4,500,000   3. ரூ. 5,000,000
4. ரூ. 5,600,000   5. ரூ. 7,000,000   (.......)

26. 2018.03.31 இல் கம்பனியினால் வழங்கப்பட்டுள்ள மொத்த பங்குகளின் எண்ணிக்கை யாது?
1. 200000   2. 220000   3. 240000
4. 250000   5. 3000000   (.......)

- **27, 28 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

2017.04.01 இல் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த வரையறுத்த “தில்ஷான்” பொதுக்கம்பனியின் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து பெறப்பட்ட ஏனைய தரவுகள் வருவாறு,
- வரிக்கு முன் இலாபம் ரூ. 1,200,000
- ஆண்டுக்கான வரி, வரிக்கு முன் இலாபத்தில் $\frac{1}{3}$ பங்காகும்.
- செலுத்திய வருமான வரி ரூ. 300,000 ஆகும்.
- 2018.03.31 இல் காணி மீள்மதிப்பீட்டினால் ஏற்பட்ட குறை ரூ. 100,000 ஆகவும், கட்டிட மீள்மதிப்பீட்டினால் ஏற்பட்ட மிகை ரூ. 150,000 ஆகவும் காணப்பட்டது.

27. 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் இலாபம்,
1. ரூ. 1,350,000   2. ரூ. 1,250,000   3. ரூ. 1,200,000
4. ரூ. 900,000   5. ரூ. 800,000   (.......)

28. ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு?

1. ரூ. 50,000   2. ரூ. 100,000   3. ரூ. 150,000
4. ரூ. 200,000   5. ரூ. 250,000   (.......)

29. 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு?
1. ரூ. 800,000   2. ரூ. 850,000   3. ரூ. 900,000
4. ரூ. 950,000   5. ரூ. 1,000,000   (.......)

30. **2018.03.31** இல் நிதிநிலமைக் கூற்றில் வருமான வரி தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியது,

		ரூ.
1.	நடைமுறைப் பொறுப்பில் அட்டுரு வரியாக	100,000
2.	நடைமுறை சொத்தில் முற்பண வரியாக	100,000
3.	நடைமுறைப் பொறுப்பில் அட்டுரு வரியாக	300,000
4.	நடைமுறை சொத்தில் முற்பண வரியாக	300,000
5.	நடைமுறை பொறுப்பில் அட்டுரு வரியாக	400,000

(.......)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிக்கோட்டின் மேல் எழுதுக.**

31. நிறுவனமொன்றின் முகாமைத்துவ கணக்கீடு தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா? பொய்யா**? என குறிப்பிடுக.

	கூற்றுக்கள்	**உண்மை /பொய்**
A	அது நிறுவனம் தொடர்பான கடந்தகால, எதிர்கால தகவல்களை வழங்கும்.	....
B	அது நிறுவனத்தின் பணத்தினால் அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் மட்டும் எடுத்துக் காட்டும்.	....
C	அது நிறுவனத்தின் முகாமையாளருக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்கும்.	....
D	அது நிறுவனத்தின் மீது அக்கரை செலுத்தும் வெளியக கட்சியினருக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொது நோக்க நிதிக் கூற்றுக்களை வழங்குகிறது.	....

32. 2018.10.01 இல் அமல் ரூ. 200,000 வுக்கு பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தார். அன்றைய தினமே அவை கிரயத்தில் 25% மொத்த இலாபம் வைத்து காசுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் அதற்காக ரூ. 10000 விற்பனை செலவொன்றும் ஏற்பட்டது.
மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தின் தேறிய விளைவினை குறிப்பிடுக.
சொத்துக்கள் ரூ. .... = **பொறுப்புக்கள் ரூ.** .... + **உரிமை ரூ.** ....

33. பின்வரும் முதன்மை ஏடுகளுக்கு பொருத்தமான மூல ஆவணத்தினை குறிப்பிடுக.

	முதன்மை ஏடு	**மூல ஆவணம்**
A	கொள்வனவு தினசேரி	....
B	காசு பெறுவனவு நாளேடு	....
C	கொள்வனவுத் திரும்பல் ஏடு	....
D	சில்லறை கொடுப்பனவு நாளேடு	....

34. வியாபாரமொன்றில் சில்லரை காசு தொடர்பான தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

		(ரூ)
2018.10.01	இல் சில்லறை காசு மீதி	1800
2018.10.01	மீள் நிரப்பல்	8200
2108.10.31	இல் சில்லறை காசு மீதி	9700

2018 நவம்பர் மாதம் முதல் வசக்கட்டு மீதியினை ரூ. 2000 வினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

(அ) 2018.11.01 இல் மீள்நிரப்பப்படும் தொகை எவ்வளவு? (ரூ) ....

(ஆ) வசக்கட்டடு மீள் நிரப்பலுக்கான நாட்குறிப்பு பதிவை தருக. (விளம்பல் அவசியமில்லை)

....

....

35. 2018.10.31 ல் "கசுன்" வியாபாரத்தின் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூ. 68,000 வினை செலவு மீதியாக காட்டியது. எனினும் அத்தினம் வங்கியினால் அனுப்பபட்ட வங்கிக் கூற்றானது வேறொரு மீதியினை காட்டியது. பரிசீலனைகளின் போது பின்வரும் வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கடன்பட்டோர் நேரடியாக இட்ட தொகை ரூ 20,000.
- 2018.10.31 இல் வழங்கப்பட்ட காசோலை ரூ 15,000 இன்னும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை
- வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 2000
- வழங்கப்பட்ட ரூ. 8000 காசோலை வங்கியினால் மறுக்கப்பட்டிருந்தது.
- வைப்பிலிட்ட காசோலை ரூ. 6000 வங்கியினால் வேரொருவரின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

2018.10.31 இல் பின்வருவனவற்றை கணிக்க.

(அ) வங்கிக் கூற்றுப் படி மீதி ரூ. ....

(ஆ) நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய காசு மீதி ரூ. ....

36. வரையறுக்கப்பட்ட ரேணுகா பொதுக் கம்பனியின் 2018.10.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ. 260,000 ஆகும். அத்தினம் கடன்பட்டோர் பேரேட்டு மீதி இம்மீதியிலிருந்து வேறுபட்டது. அதற்கான காரணங்களாக பின்வருவன அடையாளம் காணப்பட்டது.

- விற்பனை நாளேட்டின் பெறுமதி நிரலின் மொத்தம் ரூ. 63,000 கடன்பட்டோர் கட்டுப்பபாட்டுக் கணக்கில் ரூ. 36,000 ஆக பதியப்பட்டிருந்தது.
- குறித்த காலத்தினுள் செலுத்தப்படாத கடன்பட்டோர் மீதிக்கு அறவிட்ட தாமத வட்டி ரூ. 8000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ரூ. 6000 செலவுத்தாலொன்று ஏடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.

2018.10.31 இல திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி எவ்வளவு? ரூ. ....

37. கீழ்வரும் ஒவ்வொரு உருப்படிகளும் நிதிக்கூற்றுக்களின் எக் கூறைச்சாரும் என குறிப்பிடுக.

	உருப்படிகள்	நிதிக்கூற்றின் கூறு
A	பொது ஒதுக்கம்	....
B	பெறுமானத் தேய்வு ஏற்பாடு	....
C	விற்பனை திரும்பல்	....
D	முற்பணமாக பெற்ற வாடகை	....

38. வரையறுக்கப்பட்ட பொதுக்கமபனியொன்றினால் தயாரிக்கப்படுகின்ற பூரண நிதிக்கூற்று தொகுதியின் 4 வகுதிகளை குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

39. நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கேற்ப அடிப்படைகளை இணங்காண்பதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நியதிகள் 02 ஐ குறிப்பிடுக.

1. ....
....

2. ....
....

40. சக்தி வியாபாரத்தின் 2018.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான அறவிட முடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு தொடர்பான தரவுகள் வருமாறு,

	(ரூ)
2017/04/01 இல் ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு மீதி	36,000
2018.03.31 இல ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு மீதி	45,000
ஆண்டுக்காலத்தில் பதிவழிக்கப்பட்ட அறவிட முடியாக் கடன்	8000
மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன்	3000

2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் வருமான கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய அறவிட முடியா ஐயக்கடன் தொகை எவ்வளவு? ரூ. ....

41. உற்பத்தி வியாபாரமொன்றில் இடம்பெறும் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினால் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி **அதிகரிக்கும், குறையும், மாற்றமில்லை** என குறிப்பிடுக.

	கொடுக்கல் வாங்கல்	**அதிகரிக்கும் /குறையும் /மாற்றமில்லை**
A	மூலப்பொருள் கடன் கொள்வனவு	....
B	விநியோகஸ்தருக்கு மூலப்பொருள் திருப்பி அனுப்புதல்	....
C	விநியோகஸ்தருக்கு பணத்தை வழங்க ஏற்பட்ட காலதாமதம் காரணமாக அறவிட்ட தாமத வட்டி	....
D	மூலப்பொருள் கொள்வனவின் போது குறைக்கப்பட்ட வியாபார கழிவு	....

42. LKAS 08 (கணக்கீட்டு கொள்கை, மதிப்பீடு மாற்றம், வழுக்கள்) நியமத்திற்கு அமைய கம்பனியொன்று கணக்கீட்டு கொள்கையை மாற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் 02 ஐ குறிப்பிடுக.

1. ....

2. ....

43. 1995 ஆம் ஆண்டு 15ம் இலக்க கணக்கீட்டு கணக்காய்வு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் 02 ஐ தருக.

1. ....

2. ....

44. பெறுமதி சேர் வரி (VAT) பதிவு செய்யப்பட்ட வியாபாரமொன்றினால் 2018.10.01 இல் கொள்வனவு செய்த இயந்திரமொன்றுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு: (VAT 15% ஆகும்.)

	(ரூ. 000)
VAT உள்ளடக்கப்பட்ட கொள்விலை	2300
உட்சுமை கூலி	80
இயந்திரததிற்கான இட அமைத்தல் கிரயம்	60
பொருத்துதல் கிரயம்	40
பரீட்சாத்த உற்பத்திக் கிரயம்	20

VAT நீக்கப்பட்ட பெறுமதியில் 10% வியாபாரக் கழிவு பெறப்பட்டது.

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) நியமத்திற்கு அமைய முதன்முதலில் அடையாளம் காணக் கூடிய இயந்திரத்தின் கிரயப் பெறுமதியை கணிப்பிடுக. ரூ. ....

45. LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் நிகழத்தக்க சொத்துக்கள்) நியமத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு ஒன்றினை அடையாளம் காண்பதற்கு பூர்த்தி செய்யக் கூடிய நிபந்தனைகள் 02 ஐ குறிப்பிடுக.

1. ....
....

2. ....
....

46. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "T" எழுத்தினையும் பிழையாயின் "F" எழுத்தினையும் புள்ளிக்கோட்டின் மேல் எழுதுக.

	கூற்றுக்கள்	**சரி /பிழை**
A	ஆடை தொழிற்சாலையொன்றில் இயந்திர இயக்குனருக்கு வழங்கும் சம்பளம் மாறும் கிரயமாகும்.	....
B	நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்படுவதில்லை	....
C	நிறுவனமொன்றில் கணக்கீட்டு மதிப்பீடொன்று மாற்றப்படும் போது அது கடந்தகால எதிர்கால நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படும்.	....
D	இருப்பு மதிப்பீட்டுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த FIFO முறைக்கு பதிலாக WAC முறையை பயன்படுத்துதல் கணக்கீட்டு மதிப்பீடு மாற்றம் ஒன்றாக கருதப்படும்.	....

47. வரையறுக்கப்பட்ட ஜயா கம்பனியானது 2018.01.01 இல் ஒவ்வொன்றும் ரூ. 40 படியான 1000,000 பங்குகளை விற்பனை செய்வதற்கான பொது அறிவித்தலை முன் விவரணம் மூலம் வெளியிட்டது. இதன் படி 1200,000 பங்குளுக்கான பணம் முழுமையாக பெறப்பட்டது. அத்துடன் 1000,000 பங்கு விகிதாசாரப்படி ஒதுக்கப்பட்டு மேலதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பணம் மீள செலுத்தப்பட்டது.

பின்வருவனவற்றுக்கான நாட்குறிப்பு பதிவுகளை குறிப்பிடுக. (விளம்பல் அவசியமில்லை.)

(அ) விண்ணப்பப் பணம் பெறப்படல்

....

....

(ஆ) விண்ணப்பங்களுக்கான பங்குகள் ஒதுக்கப்படல்.

....

....

48. 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியொன்றின் உரிமை மாற்றல் கூற்றிற்கு அமைய, 2017.04.01 இல் மீதிகளும் ஏனைய உருப்படிகளும் கீழே காட்டப்பட்டுள்ளது. (ரூ. 000)

விபரம்	கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	பகிரப்படாத இலாபம்	மொத்தம்
2017/4/1 இல் மீதி	2000	300	-	1200	3500
A	-	-	100	(100)	-
B	200	-	-	(200)	
C	-	(150)	-	900	750
D				(350)	(350)
2018.03.31 இல் மீதி	2200	150	100	1450	3900

மேலே A,B,C, D என குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளை அடையாளம் காண்க. (பெறுமதி அவசியமில்லை)

A - ....

B - ....

C - ....

D - ....

49. ஒதுக்கங்களை மூலதனமாக்குதல், உரிமை வழங்குதல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் 2 ஐ குறிப்பிடுக.

1. ....

2. ....

50. இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் 4 ஐ குறிப்பிடுக.

1. ....

2. ....

3. ....

4. ....

❋❋❋

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

33 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

First Term Test - Grade 13 - 2018

சுட்டெண் : ....

கணக்கீடு II
Accounting II

காலம் : 3 மணி

1ஆம் 2ஆம் வினா உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01 வரையறுக்கப்பட்ட விமல் பொதுக்கம்பனியின் 2018.03.31ல் உள்ளவாரான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	வரவு (ரூ. 000)	செலவு (ரூ. 000)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயத்தில்)		
காணி கட்டிடங்கள்	20000	
காரியாலய உபகரணங்கள்	3000	
மோட்டார் வாகனம்	4000	
குத்தகை தவணை கட்டண கணக்கு	930	
வியாபார வருமதிகள்	2440	
நிர்வாக செலவுகள்	2550	
விற்பனைக் கிரயம்	8000	
2018.03.31 ல் இருப்பின் கிரயம்	1000	
ஆண்டுக் காலத்தில் செலுத்திய வருமான வரி	1350	
விநியோக செலவுகள்	2400	
சில்லரை காசு மீதி	130	
காசு மீதி	2000	
விற்பனைகள்		25000
2017.04.01 ல் பொறி ஆதன உபகரண திரண்ட தேய்வு		
கட்டிடங்கள்		1200
காரியாலய உபகரணம்		900
மோட்டார் வாகனம்		750
வியாபார சென்மதிகள்		1500
2017.04.01 ல் ஐயக் கடன் ஏற்பாட்டு மீதி		200
15% வங்கிக் கடன்		1000
2017.04.01ல் வருமான வரி ஏற்பாடு		200
குத்தகை கடன் கொடுனர்		2400
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (200,000 பங்குகள்)		10000
பொது ஒதுக்கம்		1000
பகிரப்படாத இலாபம்		3650
	47800	**47800**

மேலதிக தகவல்கள்

2018.03.31ல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

i) 2018.03.31 ல் இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ. 950,000 ஆகும்.

ii) காணியின் கிரயம் 15 மில்லியன் ரூபாவாகும். 2017.04.01 ல் காணியானது முதல் தடவையாக தொழில் சார் நிபுணத்துவ நிறுவனமொன்றினால் 16 மில்லியன் ரூபாவாக மீள்மதிப்பிடப்பட்டது.
- கட்டிடங்களும், காரியாலய உபகரணங்களும் கிரயத்தில் 5% மும்,
- மோட்டார் வாகனம் கிரயத்தில் 20% மும் வருடாந்தம் தேய்விடப்படுதல் வேண்டும்.

iii) 2017.04.01 ல் 2.4 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்று குத்தகை அடிப்படையில் பெறப்பட்டதுடன், இது முறையாக ஏடுகளில் பதியப்பட்டிருந்தது. வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் ரூ. 930,000 ஆகும். நிதியாண்டில் செலுத்தப்பட்ட குத்தகை தவணைக் கட்டணமானது குத்தகை தவணை கட்டண கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. குத்தகைக் காலம் 04 வருடங்களாகவும், பயனுள்ள ஆயுட்காலம் 05 வருடங்களாகவும் காணப்பட்டது. நிகழாண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டுக்கான குத்தகை தவணை கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகை வட்டி வருமாறு,

2017 / 2018	ரூ. 480,000
2018 / 2019	ரூ. 390,000

iv) 2018.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான அட்டுரு மின் கட்டணம் ரூ. 40,000 ஆகவும் முற்பண காப்புறுதி ரூ. 10,000 ஆகவும் இருந்ததுடன் வங்கிக் கடனுக்கான வருட வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை.

v) 2018.03.31 ல் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூ. 40,000 முறிவடைந்ததாக 2018.04.01 இல் நீதிமன்றம் அறிவித்தது. கம்பனி 2018.06.30 ல் நிதிக்கூற்றுக்களை அனுமதித்துள்ளது. எஞ்சிய கடன்பட்டோரில் 10% ஐயக் கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

vi) கம்பனியானது விற்பனை உத்தரவாதத்துடன் பொருட்களை விற்பனை செய்கிறது. இவ்வருட விற்பனையில் 2% ஐ உத்தரவாத ஏற்பாடு செய்ய நிறுவனம் தீர்மானித்துள்ளது.

vii) சென்ற வருட அட்டுரு வரியானது இவ்வாண்டு செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவ்வரி செலுத்தப்பட்ட வரியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிகழாண்டு வரியானது வரிக்கு முன் இலாபத்தில் $\frac{1}{4}$ பங்கு என மதிப்பிடப்பட்டுள்ளது.

viii) 2018. 03.31 ல் இயக்குனர் சபையின் தீர்மானங்களாவன,

1. இத்தினத்தில் காணப்பட்ட சாதாரண பங்குகளுக்கு பகிரப்படாத இலாபத்தை பயன்படுத்தி 5 சாதாரண பங்குகளுக்கு 1 சதாரண பங்கு என்ற அடிப்படையில் ஒரு பங்கு ரூ. 50 படி ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்பட்டது.
2. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 1000,000 வை மாற்றுதல்
3. சாதாரண பங்கொன்றிற்கு ரூ. 2 பங்கிலாபம் வழங்குதல்.

வேண்டப்படுவது,

LKAS -01 (நிதிக் கூற்றுக்களை சமர்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்கு தேவையான சில்வா பொதுக்கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

1) 2018.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று
2). 2018.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று
3). 2018.03.31 ல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று **(20 புள்ளி)**

02. (அ) எரங்க, சுரங்க, விரங்க ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:3:2 என பகிர்ந்து செல்லும் பங்குடமை வியாபாரமொன்றை எரங்கவிற்கு சொந்தமான கட்டிடமொன்றில் நடாத்திச் செல்கின்றனர். 2017.03.31 இல் இப்பங்குடமையின் மூலதன மற்றும் நடைமுறை கணக்கு மீதிகள் கீழ்வருமாறு காணப்பட்டது.

		ரூ. 000
மூலதன கணக்கு	எரங்க	5,040
	சுரங்க	3,040
	விரங்க	2,000
நடைமுறை கணக்கு	எரங்க	2,500
	சுரங்க	1,500
	விரங்க	(580)

மேலதிக தகவல்கள்

i) 2017.04.01 இல் விரங்க பங்குடமை வியாபாரத்திலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்கு செலுத்த வேண்டிய தொகை அவரது கடன் கணக்கிற்கு மாற்றுவதற்கும், அம்மீதிக்கு 10% வட்டி செலுத்துவதற்கும் இணங்கப்பட்டது. இத்தினத்தில் நன்மதிப்பானது ரூ. 400,000 என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது பங்காளர் மூலதன கணக்கினூடாக சீராக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ii) எரங்கவும், சுரங்கவும் முறையே இலாப நட்டங்களை 3:2 என பகிர்ந்து, பங்குடமையை தொடர்ந்து நடாத்தி செல்ல தீர்மானித்ததுடன், புதிய பங்குடமையின் ஒப்பந்தம் பின்வருமாறு

1. சீராக்கப்பட்ட மூலதன மீதிக்கு வருடாந்தம் 10% வட்டி வழங்கப்படும்.
2. பங்காளர்களுக்கு மாதாந்த சம்பளமாக ரூ. 20,000 வழங்கப்படும்.
3. வருடாந்தம் ரூ 40,000 வரை பற்றுவதற்கு அனுமதித்தல்.

iii) 2018.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்காக ஏடுகளிலிருந்து பின்வரும் விடயங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டது.

	ரூ. 000
விற்பனை	8,012
விற்பனைக் கிரயம்	5,109
செயற்பாட்டு செலவுகள்	500
ஏனைய வருமானங்கள்	35
2018.02.01 இல் ஆரம்பிக்கப்பட்ட 12% வட்டி (வருட) உரித்துடைய 3 மாத நிலையான வைப்பு	500
ஆதனம், பொறி மற்றும் உபகரண தேய்வு	300

iv) எரங்கவிற்கு மாதாந்தம் ரூ. 10,000 வாடகை செலுத்தப்படுவதுடன், இது 2018.01.01 இலிருந்து மாதாந்தம் ரூ. 15,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

v) செயற்பாட்டு செலவினுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
1. வியாபாரத்திலிருந்து செலுத்தப்பட்ட எரங்கவின் வருமான வரி ரூ 20,000
2. எரங்கவும், சுரங்கவும் பற்றிய 6 மாத சம்பளங்கள்.
3. முதல் 9 மாதத்திற்கு செலுத்தப்பட்ட கட்டிட வாடகை.

vi) 2018.03.31 ல் அட்டுரு வருமானம், செலவுகளின் விபரம் பின்வருமாறு.
1. இறுதி காலாண்டிற்கான கட்டிட வாடகை
2. விரங்கவிற்கு செலுத்த வேண்டிய கடன் வட்டி
3. நிலையான வைப்பு வட்டி

vii) விற்பனைக்காக வாங்கப்பட்ட தளபாட உபகரணம் ரூ. 200 000, தளபாட உபகரண கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு அதன் ஆண்டிறுதி மீதிக்கு வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% தேய்விடப்படும்.

viii) விற்பனை விலையில் 25% இலாப எல்லை வைத்து "விற்பனை செய் அன்றேல் திருப்புக" எனும் ஒப்பந்தத்திற்கமைய விற்பனை செய்யப்பட்ட ரூ. 24,000 விலையிடப்பட்ட பொருட்கள் 2018.03.31 வரை விற்கப்படவுமில்லை, அதனை திருப்பி அனுப்புவதற்கான காலமும் இருந்தது. இது கடன் விற்பனையாக பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

1) 2018.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று (பங்காளர் பகிர்வுகள் உட்பட)
2). 2018.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர் மூலதன கணக்கும், நடைமுறை கணக்கும். (நிரல்களுடன்) **(10 புள்ளிகள்)**

(ஆ) வணிகமொன்றிலிருந்து பெறப்பட்ட மோட்டார வாகனங்ள் 4 தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனம்	கொள்வனவுத் திகதி	கிரயம் ரூ. "000"	பயன் தரு ஆயுட் காலம்	எஞ்சிய பெறுமதி ரூ. "000"
V_1	2014.04.01	2,250	7	150
V_2	2014.10.01	2000	18	200
V_3	2016.04.01	660	8	20
V_4	2018.01.01	?	10	50

மேலதிக தகவல்கள்

i) மோட்டார் வாகனம் V_1ஆனது 2017.04.01 இல் ரூ. 450,000 செலவில் நவீனமயப்படுத்தப்பட்டது, இதன் விளைவாக அதன் பயன்படு ஆயுட்காலம் 11 ஆண்டு வரைக்கும், எஞ்சிய பெறுமதி ரூ. 200,000 வரைக்கும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டது.

ii) மோட்டார் வாகனம் V_2 வின் எஞ்சிய பயனுள்ள ஆயுட்காலம் இன்னும் 12 ஆண்டுகள் மட்டுமே என 2017.10.01 ல் தீர்மானிக்கப்பட்டது.

iii) மோட்டார் வாகனம் V_4 வினை கொள்வனவு செய்வதற்காக மோட்டார் வாகனம் V_3 ஆனது ரூ. 500,000 இற்கு பகுதிமாற்றாக வழங்கப்பட்டும் காசாக மிகுதி ரூ. 300,000 வும் செலுத்தப்பட்டது. மோட்டார் வாகனம் V_4 இனை பயன்படுத்த முன் ரூ. 50,000 செலவில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.

வேண்டப்படுவது,

1) 2018.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான மோட்டார் வாகன தேய்வுத் தொகையை கணிக்க.
2). மோட்டார் வாகன முடிவுசெய்தல் இலாப நட்டத்தை கணிக்க. **(10 புள்ளி)**

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. 2018.04.01 இல் "ரோஹினி ஸ்டோர்ஸ்" வணிகத்தின் நிதி நிலமைக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

	ரூ. '000'
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	400
இருப்பு	50
வியாபார வருமதிகள்	42
காசு	58
	550
மூலதனம்	410
வங்கிக் கடன்	100
வியாபார சென்மதிகள்	39
ஏனைய சென்மதிகள்	1
	550

வணிகத்தின் அனைத்து காசுக் கொடுக்கல் வாங்கல்களும் காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2018 ஏப்ரல் மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

i. 04/02 காசுக்கு கொள்வனவு ரூ. 25,000

ii. 04/05 கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசோலை ரூ. 27000, அனுமதித்த கழிவு ரூ 3000.

iii. 04/08 காசுக்கு விற்பனை ரூ 25000, கடன் விற்பனை ரூ. 25,000 ஆகும். இவ் இருப்புக்களின் கிரயம் ரூ. 30,000

iv. 04/12 கடன் கொடுனருக்கு செலுத்த வேண்டிய ரூ 10,000, ரூ. 1000 கழிவு கழித்து தீர்க்கப்பட்டது.

v. 04/15 கொடுத்த மின்சாரம் ரூ 3000 இதில் ரூ. 1000 சென்ற மாதத்திற்குரியது.

vi. **04/16** உரிமையாளர் ரூ. 2000 ற்கான காசோலையொன்றை வரைந்து காசை எடுத்தார்.

vii. 04/17 04/05 இல் கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசோலை மறுக்கப்பட்டது.

viii. 04/20 வங்கிகடன் தவணைக் கட்டணம் செலுத்தியது ரூ 20,000 இதில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி ரூ. 4000.

ix. 04/22 04/15 இல் மின்சார கட்டணத்திற்காக செலுத்திய காசோலை மறுக்கப்பட்டது.

x. 04/25 ரூ. 20,000 கிரயமான பொருட்கள் அழிவடைந்தது. இதில் ரூ. 15,000 இனை காப்புறுதி நிறுவனம் தர ஒப்புக்கொண்டது.

xi. 04/30 ரோஹினி தனது வீட்டிலிருந்த ரூ. 25,000 பெறுமதியான கணனி இயந்திரத்தினை வியாபார பாவனைக்கு வழங்கினார்.

வேண்டப்படுவது,

(அ) மேலுள்ள கொடுக்கல் வாங்கள்களும் நிகழ்வுகளும் கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவினை பெறுமதிகளுடன் குறிப்பிடுக. குறைவடையும் போது (-) அல்லது அடைப்புக்குறியினுள் குறிப்பிடுக. (ரூ. 000)

கொ. வா இல.	சொத்துக்கள்					உரிமையாண்மை		பொறுப்புக்கள்		
	ஆதனம் பொறி உபகரணம்	இருப்பு	வியாபார வருமதிகள்	ஏனைய வருமதிகள்	காசு	மூலதனம்	நிறுத்தி வைத்த வருவாய்	வங்கிக்கடன்	வியாபார சென்மதிகள்	ஏனைய சென்மதிகள்
1)										
2)										
....										

(ஆ) கீழ்வரும் மேலதிக தகவல்களையும் கருத்திற் கொண்டு 2017.04.28 ல் முடிவடைந்த மாதத்திற்கான ரோஹினி ஸ்டோர்சின் தேறிய இலாபத்தை கணிப்பதுடன் நிதி நிலமை கூற்றையும் தயாரிக்க.

1. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும்.
2. கடன் பட்டோரில் ரூ 3000 அறவிட முடியா கடனாக பதிவழிக்கப்படும். **(15 புள்ளி)**

04. (அ) நதீரா அரிசி மா உற்பத்தி கம்பனியின் 2018.09.30 இல் முடிவடைந்த அரையாண்டுக்கான கிரய விபரம் பின்வருமாறு,

i) காணப்பட்ட சொத்து பொறுப்புக்கள் சில:

	2018.04.01 (ரூ. 000)	2018.09.30 (ரூ. 000)
இயந்திரத்தின் கிரயம்	2000	2000
இருப்புக்கள் - மூலப்பொருள்	130	70
- குறைவேளை	75	120
- முடிவுப்பொருள்	-	75
- பொதியிடல் பொருள்	5	15
அட்டுரு நேர் கூலி	60	90

ii) 2018.09.30 இல் முடிவடைந்த அரையாண்டில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள்.

	(ரூ. 000)
காசுக் கொள்வனவு	210
செலுத்திய நேர் கூலி	370
பொதுமேந்தலை செலவுகள்	620
கடன் கொள்வனவு	2050
கொள்வனவுத் திரும்பல்	37

iii) பொது மேந்தலை செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ள செலவுகளும் அவற்றின் தொழிற்சாலைக்குரிய பகிர்வு விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

உருப்படிகள்	பெறுமதி ரூ “000”	தொழிற்சாலைக்கு உரியது
களஞ்சிய கட்டணமும் காப்புறுதியும்	150	2/3
மேற்பார்வையாளர் சம்பளம்	300	50%
மின்சார கட்டணம்	100	75%
இறை	20	3/5
பொதியிடல் பொருட்கள்	30	3/4
ஏனைய செலவுகள்	20	1/2

iv) இயந்திரம் நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 5% தேய்விடப்படும்.

v)சாதாரணமாக சேதமடைந்த பொருட்கள் ரூ.2000 விஷேடமாக சேதமடைந்த பொருட்கள் ரூ. 50,000 ஆகும். இவற்றின் கிரயம் ரூ. 52,000 என மதிப்பிடப்பட்டதுடன், இதில் ரூ. 40,000 இனை காப்புறுதி நிறுவனம் தர ஒப்புக் கொண்டது.

வேண்டப்படுவது,

1) 2018.09.30 இல் முடிவடைந்த அரையாண்டுக்கான உற்பத்தி கிரயக் கூற்று
2) 20,000kg உற்பத்தி செய்யப்பட்டது. விற்பனை விலையில் 25% இலாப எல்லை வைத்து விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றதெனின் 1kg இற்கான விற்பனை விலை யாது?
3) இருப்பு சேத சீராக்கத்திற்கான நாட்குறிப்பு பதிவை பெறுமதிகளுடன் தருக.
4) இறுதி முடிவுப்பொருள் இருப்பு தவிர ஏனைய அனைத்தும் விற்கப்படின் 2018.09.30 ல் முடிவடைந்த அரையாண்டிற்கான மொத்த இலாபத்தை கணிக்க. **(10 புள்ளி)**

(ஆ) ராசி உற்பத்தி கம்பனியின் 2018 ஜனவரி மாதம் பொருள் "B" களஞ்சியத்திற்கு பெறப்பட்டதும், வழங்கப்பட்டதும் தொடர்பான தகவல் பின்வருமாறு.

திகதி	விபரம்	அலகுகளின் எண்ணிக்கை	அலகொன்றின் விலை ரூ.
ஜனவரி 01	பெறுவனவு	1000	10
08	பெறுவனவு	200	11
14	வழங்கல்	800	?
15	உட்திரும்பல்	100	?
22	பெறுவனவு	400	12
26	பெறுவனவு	300	13
31	வழங்கல்	700	?

வேண்டப்படுவது,

1) முதல் உள் முதல் வெளி (FIFO) முறையில் கலஞ்சிய பேரேடு
2) 2018.01.31 இல் முடிவடைந்த மாதத்திற்கான பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் கிரயம் மற்றும் இறுதி இருப்பின் பெறுமதி என்பவற்றை கணிக்க. **(05 புள்ளி)**

(மொத்தம் 15 புள்ளி)

05. 2018 செப்டம்பர் மாதத்திற்கான வரையறுக்கப்பட்ட "ஸம்ஸ்" கம்பனியிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டது.

i) கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டது.

கடன்பட்டோர்	2018.09.01 இல் மீதி	விற்பனை	உட்திருப்பம்	பெற்ற காசு	அனுமதித்த கழிவு	அறவிட முடியாக்கடன்	2018.09.31 இல் மீதி
காயன்த	200	1150	230	650	15	-	455
நிமன்த	150	920	115	540	10	-	405
திலங்க	80	690	230	275	10	-	255
ஜீவன்த	10	-	-	-	-	10	-
மொத்தம்	**440**	**2760**	**575**	**1465**	**35**	**10**	**1115**

மேலுள்ள விற்பனை உட்திருப்பம் எனபவற்றினுள் 15% VAT உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii) 2018.09.01 இல் காசு மீதி ரூ 250,000 ஆகவும் VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 20,000 ஆகவும் காணப்பட்டது.

iii) செப்டம்பர் மாதம் இடம்பெற்ற ஏனைய காசுக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

பெறுவனவுகள்	"ரூ. 000"	
விற்பனை	1200	
பெற்ற வாடகை	25	
கொடுப்பனவுகள்		
கொள்வனவு	1500	
வங்கிக் கடன் தவணை கட்டணம்	65	(வட்டி ரூ. 15,000 உள்ளடங்கலாக)
செயற்பாட்டு செலவு	350	
செலுத்திய VAT	150	

2018.09.30 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் கடன்பட்டோர் பேரேட்டு மீதியும் இணங்கவில்லை. அதனைத் தொடர்ந்து ஏடுகளை பரிசீலனை செய்த போது பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

(அ) மாதத்திற்கான உட்திருப்பம் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 557000 என பதிவு செய்யப்பட்டிருந்துது.

(ஆ) ஜீவன்தவிடம் பெறவேண்டிய தொகை அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டது. இது பொதுப்பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோருக்கு அனுமதித்த கழிவு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கீல் வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இது அனுமதித்த கழிவுக் கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது,

1) பின்வரும் முதன்மை ஏடுகளை தயாரிக்க
   - காசு பெறுவனவு நாளேடும் காசு கொடுப்பனவு நாளேடும்
   - விற்பனை நாளேடும் உட்திரும்பல் நாளேடும்.
2) 2018.09.30 இல் கடன்பட்டோர் பேரேட்டு மீதியையும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியையும் இணக்கம் செய்யும் கூற்று.
3) மேலுள்ள வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு (விளம்பல் அவசியமில்லை)
4) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு உட்பட பொதுப் பேரேட்டில் பின்வரும் கணக்குகள்.
   - காசுக் கணக்கு - விற்பனை கணக்கு - உட்திரும்பல் கணக்கு – VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(15 புள்ளி)

06. (அ) வரையறுக்கப்பட்ட சுபா கம்பனியின் 2018.03.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பரீட்சை மீதி சமப்படவில்லை. வேறுபாடானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் வருமானக் கூற்றானது ரூ 240,000 வினை தேறிய இலாபமாக காட்டியது. பின்பு கண்டுபிடிக்கப்பட்ட வழுக்கள் பின்வருமாறு,

i) கொள்வனவு நாளேட்டின் மொத்த தொகை ரூ. 10,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

ii) வியாபார கழிவு ரூ 5000 பெற்ற கழிவாக பதியப்பட்டிருந்தது. எனினும், கழிவு கழிக்கப்பட்ட சரியான பெறுமதி கொள்வனவு நாளேட்டில் பதியப்பட்டிருந்தது.

iii) காசு பெறுவனவு நாளேட்டில் பதியப்பட்டிருந்த ரூ 10,000 வட்டி வருமானம் கொடுத்த வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

iv) 2018.01.01 இல் வணிகப்பாவனைக்காக கடனுக்கு வாங்கிய காரியாலய உபகரணம் ரூ 80,000 கொள்வனவு நாளேட்டில் பதிவிடப்பட்டிருந்தது. காரியாலய உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% தேய்விடுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

v) 2018.03.31 இல் ரூ 120,000 தேறிய பெறுமதி கொண்ட காரியாலய உபகரணமொன்றை ரூ 100,000 விற்கு விற்று பெற்ற பணமானது காசுக் கணக்கில் வரவிலும் விற்பனை கணக்கில் செலவிலும் பதிவிடப்பட்டிருந்தது. வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வேண்டப்படுவது,

1. மேலுள்ள வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு
2. கம்பனியின் இலாப சீராக்கல் கூற்று **(10 புள்ளி)**

(ஆ) 2018. மார்ச் 31 இல் விஸ்வனாத் வியாபாரத்தின் வங்கிக் கூற்று மீதியானது ரூ 48,000 இனை செலவில் காட்டியது. இது காசுப்புத்தக மீதியுடன் இணங்கவில்லை. வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு, 2018.03.01ல் இரு மீதிகளும் சமப்பட்டிருந்தது,

i) வணிகத்தினால் வழங்கப்பட்ட காசோலைகளில் ரூ 24,000 பெறுமதியானவை கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், வைப்பிலிடப்பட்ட காசோலைகளில் ரூ 12,000 இதுவரை தீர்வையாகவில்லை.

ii) வங்கியினால் வணிகத்தின் வங்கிக் கூற்றில் செலவு வைக்கப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ 6000 காசுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

iii) கடன் கொடுத்தோர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூ 2500 பெறுமதியான காசோலைக்கான கொடுப்பனவை நிறுத்துமாறு வங்கிக்கு கட்டளை இடப்பட்டிருந்த போதும், இது காசேட்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

iv) நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூ 1500 வியாபாரத்தின் ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

v) வேறொரு கணக்கு உரிமையாளர் வைப்பிலிட்ட ரூ 7500 காசோலை தவறுதலாக வங்கியினால் வணிகத்தின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

vi) வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ 1500, காசோலை புத்தகக் கட்டணம் ரூ 500 என்பன வியாபாரத்தின் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

வேண்டப்படுவது,

1) 2018.03.31 ல் காசு மீதி (திருத்த முன்)

2). 2018.03.31 ல் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய காசு மீதி

3) 2018 மார்ச் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்று **(05 புள்ளி)**

(மொத்தம் 15 புள்ளி)

07. சக்தி விளையாட்டுக் கழகத்தில் 2017.04.01ல் 100 அங்கத்தவர்கள் உள்ளனர். மாதாந்த அங்கத்துவ கட்டணம் ரூ 50 ஆகும். கணக்கீடு தொடர்பாக போதிய அறிவற்ற பொருலாளரால் 2018.03.31ல் முடிவடைந்த ஆண்டில், வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட நிதி நிலமைக் கூற்று பின்வருமாறு

2018.03.31 இல் உள்ளவாரான நிதி நிலமைக் கூற்று

2017.04.01ல் காசு மீதி	25,000	மின்கட்டணம்	7,000
அங்கத்துவ கட்டணம்	66,000	மைதான பராமரிப்பு	9,000
குளிர்பானசாலை விற்பனை	90,000	கிரிகட் பந்து	12,000
விளையாட்டு மைதான நிர்மானிப்புக்கான நிதி நன்கொடை	50,000	ஏனைய செலவுகள்	14,000
கண்காட்சி, விளையாட்டு போட்டி வருமானம்	22,000	மைதான நிர்மானிப்பு	40,000
2017.04.01ல் விளையாட்டு மைதான நிர்மானிப்பு நிதி	100,000	குளிர்பானசாலை கொள்வனவு	60,000
2017.04.01ல் திரண்ட நிதி	270,000	குளிர்பானசாலை பொருப்பாளர் சம்பளம்	24,000
		குளிர்பானசாலை இருப்பு	10,000
		அட்டுரு அங்கத்துவ கட்டணம்	9,000
		விளையாட்டு மைதானம்	275,000
		உபகரணங்கள் கிரயத்தில் (2017.04.01இல்)	60,000
		உபகரண கொள்வனவு	20,000
		கண்காட்சி , விளையாட்டுப் போட்டி செலவுகள்	12,000
		மீ /செ	71,000
	623,000		**623,000**

மேலதிக தகவல்கள்

(i) 2017.04.01 இல் சொத்து பொறுப்புக்கள் பின்வருமாறு

	(ரூ.)
குளிர்பானசாலை இருப்பு	7,000
முற்பண அங்கத்துவ கட்டணம்	3,000
அட்டுரு அங்கத்துவ கட்டணம்	6,000

(ii) 2018 ம் ஆண்டு பெற்ற சந்தா கட்டணம் பின்வருமாறு உள்ளடக்கப்பட்டிருந்தது.

	(ரூ.)
2016/2017	3,000
2017/2018	51,000
2018/2019	12,000

(iii) குளிர்பானசாலை விற்பனைகளில் $\frac{1}{3}$ பகுதியும், குளிர்பானசாலை கொள்வனவுகளில் $\frac{1}{4}$ பகுதியும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iv) விளையாட்டு உபகரணங்களின் காலப்பகுதியின் இறுதி மீதிக்கு வருடாந்த 10% நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும்.

வேண்டப்படுவது,

1) 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான குளிர்பானசாலை வருமானக் கூற்று
2) 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று
3) 2018.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று **(15 புள்ளிகள்)**

வடமேல் மாகாணக் கல்வித்திணைக்களம்
முதலாம் தவணைப் பரீட்சை - **2018 - 13** தரம்
கணக்கீடு Accounting பகுதி- I

1	3	11	5	21	2
2	2	12	3	22	3
3	4	13	1	23	5
4	5	14	2	24	3
5	1	15	4	25	1
6	4	16	2	26	3
7	4	17	2	27	5
8	1	18	3	28	3
9	2	19	5	29	4
10	2	20	5	30	1

(புள்ளி 4 x 30 = 120)

31. (A) பொய் (01) (B) பொய் (01) (C) உண்மை (01) (D) பொய் (01) (4 புள்ளி)

32. சொத்து 240000/= (02) = பொறுப்பு 200000/= (01) + உரிமை 40000/= (01)

33. (A) கொள்வு பட்டியல் (01) (B) பற்றுச் சீட்டு (01)
(C) வரவுத் தாள் (01) (D) சில்லறை காசு கொடு. கைச்சாத்து (01)

34. (அ) 11700/= (02)
(ஆ) சில்லறை காசுக் கு/கு - வரவு 11700/=
காசுக் க/கு - செலவு 11700/= (02)
(பெறுமதி பிழையாகவும் பதிவு சரியாகவும் இருப்பின் (01) புள்ளி மட்டும்)

35. (அ) 33000/= மேலதிக பற்று பதி (02)
(ஆ) 42000/= மேலதிக பற்று (02)

36. 289000/= (4)

37. A - உரிமை (01)
B - சொத்து (01)
C - வருமானம் (01)
D - பொறுப்பு (01)

38. i. முற்றுமடங்கிய வருமானக் கூற்று
ii. நிதி நிலைமைக் கூற்று
iii. உரிமை மாற்றல் கூற்று
iv. காசுப் பாய்ச்சல் கூற்று
v. கணக்கீட்டு குறிப்புக்களும் கொள்கைகளும்
(ஏதேனும் 4 இற்கு 4 புள்ளிகள்)

39. 1. அடிப்படை வரைவிலக்கணத்திற்கு ஏற்புடையதாக இருத்தல்
2. அந்த உருப்படிகளுக்கு ஏற்ப எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் வணிக அலகினுள் உட்பாயக்கூடிய அல்லது வணிக அலகிலிருந்து வெளிச்செல்லக்கூடிய சாத்தியம் இருத்தல் வேண்டும்.
3. அவ் உருப்படியின் கிரயத்தை அல்லது பெறுமதியினை நம்பகரமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல்.
(ஏதேனும் 2 காரணிகளுக்கு 4 புள்ளிகள்) (2x2)

(40) 14000/= (04)

(41) A - அதிகரிக்கும் (01) B - குறைவடையும் (01)
C - அதிகரிக்கும் (01) D - மாறாது (01)

(42) 1. புதிய கணக்கீட்டு நியமத்தின் தேவையான அடிப்படையில் (02)
2. நிறுவனத்தின் நிதி நிலைமை or ஆற்றுகைத்திறன் or காசுப்பாய்ச்சல் என்பன முன்னரை விட கூடிய நம்பகத்தன்மை கொண்ட தகவல்களாக வழங்குவதற்கு மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவைகள் ஏற்படும் போது. (02)

(43) 1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் குழு
2. இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு
3. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்
(ஏதேனும் இரண்டிற்கு 4 புள்ளிகள்) 2x2.

(44) 2,000,000/= (04)

(45) 1. அமைப்பொன்றின் கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறொன்றாக நிகழ்கால கடப்பாடு காணப்படல்.
2. அக்கடப்பாட்டினை தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலமொன்றுடன் இணைந்த வளங்கள் அமைப்பிலிருந்து வெளிச்செல்லக்கூடிய தன்மையொன்றை கொண்டிருத்தல்.
3. கடப்பாட்டிற்குரிய தன்மையின் பெறுமானத்தை நம்பகத்தன்மை கொண்டதாக அளவிடக்கூடியதாக இருத்தல்.
(ஏவையேனும் இரண்டிற்கு 4 புள்ளிகள்) 2x2.

(46) (A) T (01) (B) T (01) (C) F (01) (D) F (01)

(47) (அ) காசுக் க/கு வரவு 48 000 000/= (02)
விண்ணப்ப ஒதுக்கல் க/கு - செலவு 48 000 000/=
(ஆ) விண்ணப்ப ஒதுக்கல் க/கு வரவு 40,000,000/= (02)
கோரப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் செலவு 40 000 000/=

(48) (A) பகிரப்படாத இலாபத்தை பயன்படுத்தி பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல் (01)
(B) பகிரப்படாத இலாபம் (ஒதுக்கம்) மூலதனமாக்கப்படல் (01)
(C) மொத்த முற்றடக்க வருமானம் (01)
(D) பங்கிலாபம் வழங்குதல் (01)

(49) 1. ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்படும் போது காசு உட்பாய்ச்சப்படுவது இல்லை. ஆனால் உரிமை வழங்களின் போது காசு உட்பாய்ச்சப்படும். (02)

2. கம்பனியில் ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்படும் போது மொத்த உரிமையில் மாற்றம் ஏற்படமாட்டாது. ஆனால் உரிமை வழங்களினால் உரிமை முதல் அதிகரிக்கும். (02)

(50) 1. திறமைகளை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான பரீட்சைகளை நடாத்துதலும் அவற்றிற்குரிய பாடத்திட்டங்களை உருவாக்குதலும்.

2. மாணவர் கல்வி, பயற்சி வழங்கல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல்

3. தொழில்சார் நியமங்களை சரியான சரியான முறையில் பேணுதலும், நியமங்களை பேணிச்செல்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் ~~[illegible]~~ ஆதப்புரைகளை அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தலும்

4. கணக்கீட்டு பாடத்திற்கான ஆய்வுகள், உசாக்குறிப்புகள், என்பவற்றை மேற்கொள்ளல்.

5. தொழில்சார் நன்மைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பாதுகாத்தல்.

(ஏதேனும் 4 காரணிகளுக்கு 4 புள்ளிகள்)
(4 × 1 = 4)

கணக்கீடு பகுதி- II -

ஷமல் பொதுக் கம்பனி (01)
2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்றடக்க வருமானக் கூற்று. Rs'000

விற்பனை		25000
(-) விற்பனை கிரயம்		(8000)
மொ. இலாபம்	(1)	17000
(-) விநியோக செலவு	3780 (04)	
நிர்வாக செலவு	2980 (04)	
ஏனைய செலவு	50 (01)	
நிதிச் செலவு	630 (02)	(7440)
வரிக்கு முன் இலாபம்	(01)	9560
வருமான வரி	(01)	(2390)
ஆண்டுக்கான இலாபம்	(01)	7170
பிற முற்றுமடங்கிய வருமானங்கள்		
காணி மீள்மதிப்பீட்டு மிகை	(01)	1000
மொத்த முற்றுமடங்கிய வருமானம்	(01)	8170

(18 புள்ளிகள்)

ஷமல் பொதுக் கம்பனி (01)
2018.03.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.

ந.மு. அல்லாச் சொத்து		
ஆதனம், பொறி, உபகரணம்	(02)	22030
குத்தகை ஆதனம்	(01)	1920
ந.மு. சொத்துக்கள்		
இருப்பு	950 (01)	
முற்பண காப்புறுதி	10 (01)	
வியாபார வருமதி	2160 (01)	
காசும் காசுக்கு சமனானவை	2130 (01)	5250
		29200
உரிமையும் பொறுப்பும்		
கூறப்பட்ட சாதாரண பங்கு முதலீடு (01)		12000
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	1000	
பொது ஒதுக்கம்	2000	
பகிரப்படாத இலாபம்	7820	10820
நடைமுறையல்லா பொறுப்பு		
குத்தகை க. கொடுனர்	1410 (01)	
வங்கிக் கடன்	1000	2410
நடைமுறை பொறுப்பு		
குத்தகை க. கொடுனர்	540 (01)	
அட்டுறு மின்	40 (01)	
அட்டுறு கடன் வட்டி	150 (01)	
உத்தரவாத ஏற்பாடு	500 (01)	
வியாபார செலுத்தல்கள்	1500	
அட்டுறு வருமான வரி	1240 (01)	
		29200

(15 புள்ளிகள்)

உரிமை மாற்றல் கூற்று

	கூ. சாதாரண பங்கு	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	பகிரப்படா இலாபம்	மொத்தம்	
04/01 மீதிகள்	10000	–	1000	3650	14650	(01)
பொது ஒதுக்கத்திற்கு மாற்றியது	–	–	1000	(1000)	–	(01)
ஒதுக்கம் மூலதனமாக்கப்பட்டமை	2000	–	–	(2000)	–	
மொ. முற்றடக்க வருமானம்		1000		7170	8170	(02)
	12000	1000	2000	7820	22820	

(04 புள்ளிகள்)

குறிப்புகள்

(01) வரிக்கு முன் இலாபம் பின்வரும் செலவுகளை கழித்து கணிக்கப்பட்டுள்ளது

மோட்டார் வாகன தேய்வு	480
குத்தகை வட்டி	480
வ. கடன் வட்டி	150
விற்பனை உத்தரவாதம்	500
இருப்பு பதிவழிப்பு	50
பொறிமானத் தேய்வு	1200

4 விடயங்களுக்கு (02) புள்ளிகள்.

(02) சாதாரண பங்கொன்றிற்கு 2/= பங்கிலாபம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது (01)

(03 புள்ளிகள்)

(03) ஆதனம், பொறி, மற்றும் உபகரணம் ரூ "000"

	காணி	கட்டிடம்	கா. உபகரணம்	மோட்டார் வாகனம்	மொத்தம்
4/01 மீதி	15 000	5000	3 000	1 600	24 600
சேர்பனவு	–	–	–	–	–
அகற்றல்	–	–	–	–	–
மீள்மதிப்பீடு	1 000	(01)			1 000
3/31 ல் மீதி	16 000	5000	3 000	1600	25 600
திரண்ட பெறுமானத் தேய்வு					
4/01 மீதி	–	1 200	900	750	2850
சேர்ப்பனவு		250	150 (01)	320	720
அகற்றல்	–	–	–	–	–
3/31 ல் மீதி	–	1450	1050	1070	3570
தேறிய பெறுமதி	16000	3550	1950	530	22030

(04) குத்தகை சொத்துரிமை Rs "000"

மோட்டார் வாகனம்	2400
(-) திரண்ட தேய்வு	(480) (01)
	1920

நிர்வாக செலவுகள்

கட்டிட தேய்வு	250 (01)
கா. உபகரண தேய்வு	150 (01)
மின்சாரம்	40 (01)
காப்புறுதி	(10) (01)
நிர்வாக செலவு	2550
	2980

விநியோக செலவுகள்

மோட்டார் தேய்வு	800 (01)
அ. மு. கடன்	80 (02)
விற்பனை உத்தரவாதம்	500 (01)
விநியோக செலவு	2400
	3780

ஏனைய செலவுகள்

இருப்பு பதிவழிப்பு	50 (01)

நிதி செலவுகள்

குத்தகை வட்டி	480 (01)
வ. கடன் வட்டி	150 (01)
	630

(05)

[மொத்தம் 40 புள்ளிகள்]

(02) (அ) ஏரங்க பங்குடமை

2017.03.31 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

விற்பனை		8,000	(01)
(-) விற்பனை கிரயம்		(5,300)	(01)
மொத்த இலாபம்		2,700	
நிலையான வைப்பு வட்டி	(01) 10		
ஏனைய வருமானம்	35	45	
		2745	
வாடகை - கட்டிடம்	135 (01)		
PPE தேய்வு	280 (01)		
கடன் வட்டி - ஏரங்க	150 (01)		
ஏனைய செயற்பாட்டு செலவு	150 (01)	(715)	
தேறிய இலாபம்		2030	
மூலதன வட்டி - ஏரங்க	(01) 500		
சுரங்க	300	(800)	
சம்பளம் - ஏரங்க	(01) 240		
சுரங்க	240	(480)	
இலாபப் பங்கு - ஏரங்க	(01) 450		
சுரங்க	300	(750)	
		0	

(10 புள்ளிகள்)

ப. மூலதன க/கு

	ஏரங்க	சுரங்க	விரங்க		ஏரங்க	சுரங்க	விரங்க
நன்மதிப்பு	240	160	(01)	மீதி	5040	3040	2000
ந.மு. க/கு விரங்க			580	நன்மதிப்பு (01)	200	120	80
கடன் க/கு ஏரங்க		(01)	1500				
மீ/சே	5000	3000					
	5240	3160	2080		5240	3160	2080

(3 புள்ளிகள்)

பங்காளர் நடைமுறைக் க/கு

	ஏரங்க	சுரங்க	விரங்க		ஏரங்க	சுரங்க	விரங்க
மீதி			580	மீதி	2500	1500	
சம்பளம்	120	120	(01)	மூலதன க/கு			580
பற்று	20 (01)			கட்டட வாடகை	45 (01)		
மீ/சே	645	420 (01)		மூலதன வட்டி	500	300	(01)
				சம்பளம்	240	240	(01)
				இலாபப் பங்கு	450	300	(01)
	785	540	580		785	540	580

07 புள்ளிகள்

(ஆ) மோட்டார் வாகனம் — வருட தேய்வு ரூ. "000"

$V_1 = \frac{2250 + 450 - 900 - 200}{8}$ (01) (02) (01) (01) $= 200$

$V_2 = \frac{2000 - 200}{18} \times \frac{6}{12}$ (01) (01) $= 50$

$= \frac{2000 - 200 - (100 \times 3)}{12} \times \frac{6}{12}$ (01) (01) (02) (01) $= 62.5$ $= 112.5$

$V_3 = \frac{660 - 20}{8} \times \frac{9}{12}$ (01) (01) (01) $= 60$

$V_4 = \frac{850 - 50}{10} \times \frac{3}{12}$ (01) (01) $= 20$

மொ. வருட தேய்வு $= 392.5$

(17 புள்ளிகள்)

மோட்டார் அகற்றல் க/கு

மோட்டார் வாகனம்	660	தே.தேய்வு ஏற்பாடு	140 (01)
		மோட்டார் வாகனம்	500 (01)
		நட்டம்	20 (01)
	660		660

(03 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

ரூ "000"

(03) (அ)

(03 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

(03) (அ)

ரூ '000'

கொ.வா.	சொத்துக்கள்: PPE	இருப்பு	வியாபார வருமதி	ஏனைய வருமதி	காசு	பொறுப்புக்கள்: வ. கடன்	வியாபார செலுத்தற்பாலன	ஏனைய செலுத்தற்பாலன	உரிமை	
i		25			(25)					(01)
ii			(30)		27				(3)	(02)
iii		(30)	25		25				20	(03)
iv					(9)		(10)		1	(02)
v					(3)			(1)	(2)	(02)
vi			30		(27)				3	(02)
vii					(20)	(16)			(4)	(02)
viii					3			3		(01)
ix		(20)		15					(5)	(02)
(x)	25								25	(01)

(18 புள்ளிகள்)

இறுதி தேறிய சொத்து		445
(-) ஆரம்ப தேறிய சொத்து		(410)
		35 (01)
(-) மேலதிக மூலதனம்		(25) (01)
		10
(-) சொத்து தேய்வு	4 (01)	
அ.மு. கடன்	3 (01)	(7)
தேறியலாபம்		3

(04 புள்ளிகள்)

ஆதனம், பொறி உபகரணம்	(01) 425	
(-) பெ.தேய்வு ஏற்பாடு	(02) (4)	421
இருப்பு	25 ✓	
வியாபார வருமதி	(01) 64	
ஏனைய வருமதி	15 ✓	
காசு	29 ✓	133
		554
மூலதனம்	410	
மேலதிக மூலதனம்	25	(02)
தே. இலாபம்	3	438
வங்கிக் கடன்	84 ✓	
வியாபார செலுத்தற்பாலன	(02) 29 ✓	
ஏனைய செலுத்தற்பாலன	3 ✓	116
		554

* ✓ இற்கு மொத்தம் (2) புள்ளிகள் (08 புள்ளிகள்)

[மொத்தம் 30 புள்ளிகள்]

(04) (அ) 1)

2018.09.30 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி கிரயக் கூற்று ரூ "000"

ஆரம்ப மூ.பொருள்		130
மூ.பொருள் கொள்வனவு	2 260	
(-) திரும்பல்	(01) (37)	2 223
பயன். உள்ள மூ.பொ.		(01) 2 353
(-) இருப்பு சேதம்		(50)
		2303
(-) இறுதி மூ.பொருள்		(1) (70)
பயன்படுத்திய மூ.பொ.		2233
நேர் கூலி		(01) 400
முதன்மைக் கிரயம்		(01) 2633
உற்பத்தி பொது மேந்தலை		
வைத்தியம், காப்புறுதி	100	
மேற்பார்வை சம்பளம்	150	
மின்சாரம்	(03) 75	
இறை	12	
பொதியிடல் பொருள்	15	
ஏனைய செலவுகள்	10	
இயந்திர தேய்வு	(01) 50	412
		3045
ஆரம்ப குறைவேலை	(02) 75	
(-) இறுதி குறைவேலை	(120)	(45)
தொ. உற்பத்தி கிரயம்	(01)	3000

2) ஒரு கிலோ மாவின் கிரயம் = 3 000 000 / 20 000 (01)
= 150/= (01)

1 Kg இன் விற்பனை விலை = $\frac{150}{75}$ x100
(01) = 200/=

3) பெறவேண்டிய காப்புறுதி

க/கு - வரவு	40000	(02)
இ/நட்ட க/கு - வரவு	10000	
உற்பத்தி க/கு - செலவு	50,000	

4)

விற்பனை (20000 - 500) x 200 = ரூ 3900 000 (02)

விற்பனை கிரயம் (3,000,000 - 75000) (01) = 2925000

975 000

(20 புள்ளிகள்)

(ஆ) கலந்திய பேரேடு

திகதி	கொள்வனவு			வழங்கல்			மீதி		
	அலகு	அலகு விலை ரூ	பெறுமதி ரூ	அலகு	அலகு விலை ரூ	பெறுமதி ரூ	அலகு	அலகு விலை ரூ	பெறுமதி ரூ
1/1	1000	10	10000				1 000		10 000
8/1	200	11	2 200 (01)				1 200		12 200
14/1				800	10	8000	400		4 200
15/1	100	10	1000 (01)	(100)	10	(1000) (01)	500		5 200
22/1	400	12	4 800				900		10 000
26/1	300	13	3900	(01)	(01)		1200		13 900 (01)
31/1				300	10	3 000			
				200	11	2 200	(01)		(01)
				200	12	2 400	500		6 300
				1400		14600 (01)			

(10 புள்ளிகள்)

[மொத்தம் 30 புள்ளிகள்]

(05). காசுப் பெறுவனவு நாளேடு ரூ '000'

விபரம்	கழிவு	பெறுமதி	பகுப்பாய்வு நிரல்		
			க.பட்டோர்	விற்பனை	ஏனைய வருமானம்
விற்பனை		1 200		1 200	(01)
கயான்	15 (01)	650	650		
நிமல்	10	540	540 (01)		
திலகா	10	275	275		
வாடகை					25
	35	2690	1465	1200	25

(03 புள்ளிகள்)

காசு கொடுப்பனவு நாளேடு ரூ '000'

விபரம்	கழிவு	பெறுமதி	பகுப்பாய்வு நிரல்		
			கொள்வனவு	செயற்பாட்டு செலவு	ஏனைய
கொள்வனவு		1500	1500		(01)
வ. கடன்		65		15	50
செயற்பாட்டு செலவு		350	(01)	350	
செலுத்திய VAT		150			150 (01)
		2065	1500	365	200

(03 புள்ளிகள்)

விற்பனை நாளேடு ரூ '000'

வாடிக்கையாளர்	பெறுமதி	VAT	மொத்த பெறுமதி
கயான்	1000	150 (01)	1150
நிமல்	800	120 (01)	920
திலகா	600	90 (01)	690
பொ.பே. மாற்	2400	360	2760

(03 புள்ளிகள்)

உட்திரும்பல் நாளேடு ரூ '000'

வாடிக்கையாளர்	பெறுமதி	VAT	மொத்த பெறுமதி
கயான்	200	30 (01)	230
நிமல்	100	15 (01)	115
திலகா	200	30 (01)	230
பொ.பே.மா.	500	75	575

(03 புள்ளிகள்)

(2) க.ப. இணக்கக் கூற்று ரூ '000'

க.ப. பேரேட்டு மீதி		1115 (01)
(+) உட்திரும்பல்	18 (01)	
அ.மு.க.	10 (01)	
கழிவு	70 (01)	98
க.ப. கட்டுப்பாட்டு மீதி		1213 (01)

(05 புள்ளிகள்)

(3) பொது நாட்குறிப்பேடு ரூ '000'

4) தொங்கல் க/கு - வ	18		
க.ப. கட்டு. க/கு - செ		18	(01)
5) அ.மு.கடன் க/கு - வ	10		
க.ப. கட்டு. க/கு - செ		10	(01)
6) தொங்கல் க/கு - வ	70		
க.ப. கட்டு. க/கு - செ		70	(01)

(03 புள்ளிகள்)

(4) சீராக்கப்பட்ட க.பட்டோர் கட்டுப்பாட்டு க/கு ரூ '000'

மீதி (01)	1213	தொங்கல்	18 (01)
		அ.மு.க.	10 (01)
		தொங்கல்	70 (01)
		ம/செ	1115
	1213		1213

காசுக் க/கு ரூ '000'

மீதி	250	கொள்வனவு	1500
க.பட்டோர்	1465	செயற்பாட்டு செலவு	365
விற்பனை	1200	ஏனையவை	200
ஏனையவை	25	மீ/செ	875
	2940		2940

{மீதி தவிர ஏனைய இரு உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 03 புள்ளிகள்}

விற்பனை க/கு

		க.பட்டோர்	2400
		காசு	1200

உட்திரும்பல் க/கு

க.பட்டோர்	500		

VAT கட்டுப்பாட்டுக் க/கு

உட்திரும்பல்	75	மீதி	20
காசு	150	க.பட்டோர்	360

(மீதி தவிர ஏனைய இரு உருப்படிகளுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 03 புள்ளிகள்)

[மொத்தம் 30 புள்ளிகள்]

06 (அ) (i) பொது நாட்குறிப்பேடு

	விபரம்	வ	செ	புள்ளி
(i)	கொள்வனவு / இ. இலாப நட்ட க/கு - வ	10000		
	க. கொடுத்தோர் கட்டுப்பாட்டு க/கு - செ		10000	(02)
	(கொ/வு நாளேடு குறைத்து கூட்டியமை திருத்தப்பட்டது)			
(ii)	பெற்ற கழிவு / இலாப நட்டக் க/கு - வ	5000		(02)
	க. கொடுத்தோர் கட்டுப்பாட்டு க/கு - செ		5000	
	(வியாபார கழிவு பெற்ற கழிவில் பதிந்தது திருத்தப்பட்டது)			
(iii)	தொங்கல் க/கு - வ	20000		(02)
	இலாப நட்டக் க/கு - செ		20000	
	(வட்டி வருமானம் வட்டி செலவாக பதிந்திருந்து திருத்தப்பட்டது)			
(iv)	க. கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு - வ	80000		
	இலாப நட்ட க/கு - செ		80000	
	காரியாலய உபகரண க/கு - வ	80000		(03)
	காரியாலய உபகரண கடன் க/கு - செ		80000	
	இலாப நட்டக் க/கு - வ	2000		
	காரியாலய உபகரண தேய்வு ஒதுக்கு		2000	
	(காரியாலய உபகரண கடன் கொ/வு கடனாக பதிந்து திருத்தப்பட்டது)			
	* தேறிய விளைவு எழுதி இருப்பினும் புள்ளி உண்டு *			
(v)	இலாப நட்ட க/கு	100 000		(01)
	காரியாலய உபகரண அகற்றல்		100 000	
	{ காரியாலய உபகரண அகற்றல் க/கு	120000		(01)
	காரியாலய உபகரண க/கு		120000	
	இலாப நட்டக் க/கு - வ	20 000		(01)
	காரியாலய உபகரண அகற்றல் - க/கு		20000	
	(காரியாலய உபகரண அகற்றல், இணையாக? பதிந்தமை திருத்தப்பட்டது)			

* விபரம் இல்லையெனின் ½ புள்ளிகளை குறைக்கவும்

(12 Marks)

2) இலாப திருத்தல் கூற்று.

திருத்த முன் தே. இலாபம்		240 000
(+) வட்டி வருமானம் (01)	20 000	
கொள்வனவு (01)	80 000	100 000
		340 000
(-) கொள்வனவு	10 000 (01)	
கழிவு	5 000 (01)	
தேய்வு	2 000 (01)	
காரியாலய உபகரண விற்பனை	100 000 (01)	
காரியாலய உபகரண நட்டம்	20 000 (01)	(137 000)
திருத்தப்பட்ட இலாபம்		203 000 (01)

(08 புள்ளிகள்)

(ஆ). 1. 23 500/= (04)

2. 28500/= (03)

காசு க/கு (நிரல் நிலைமை கூற்றில்)

மீதி	23 500	காப்புறுதி	1 500
முதலீட்டு வருமானம்	6 000	வங்கி கட்டணம்	1 500
வழங்கிய காசோ. மறுக்கப்பட்டது	2500	காசோ. புத்தகம்	500
		மீ/கீ	28 500
	32 000		32 000

(ஒரு சரியான பதிவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 03 புள்ளிகள்)

வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று.

திருத்திய காசேட்டு மீதி		28500 (01)
(+) வழங்கி மாற்றப்படாத காசோலை	24 000	
வங்கி வைப்பு வைத்த காசோலை (01)	7 500	31 500 (01)
		60 000
(-) வைப்பு செய்து செலவு வைக்கப்படாத காசோலை		(12 000)
வங்கிக் கூற்றுப்படி மீதி		48000

(03 புள்ளிகள்)

[மொத்தம் 30 புள்ளிகள்]

(07). 1)

சக்தி விளையாட்டுக் கழகம்
2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
சிற்றுண்டிச்சாலை வருமான கூற்று.

விற்பனை		90,000	
(-) வி.க.கிரயம்			
ஆ. இருப்பு	7000		
கொள்வனவு	60 000		
	67 000		
(-) இ. இருப்பு	(10 000)	(57000)	(02)
மொ. இலாபம்		33 000	
சிற்றுண்டிச்சாலை பொறுப்பாளர் சம்பளம்		(24 000)	
தேறியலாபம்		9 000	(01)

(03 Marks)

2) சக்தி விளையாட்டுக் கழகம்
2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று.

அங்கத்துவ கட்டணம்		60 000	(01)
(+) சிற்றுண்டிச்சாலை இலாபம்		9 000	(01)
விளையாட்டுப் போட்டி வருமானம் இலாபம் (22000 - 12000)		10 000	(01)
		79 000	
(-) மின் கட்டணம்	7000 ✓		
மைதான பராமரிப்பு	9000 ✓		
விளையாட்டு உபகரண தேய்வு	8000 (01)		
கிரிகட் பந்து	12 000 ✓		
ஏனைய செலவு	14 000 ✓	(50 000)	
மிகை		29 000	(01)

✓ இற்கு 02 புள்ளி

(07 Marks)

3) சக்தி விளையாட்டுக் கழகம்.
2018.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று

	கிரயம்	தி.தேய்வு	தேறியது	
ந.மு. அல்லாச் சொத்துக்கள்				
விளையாட்டு மைதானமும் அரங்கும் (275000+40000)	315000		315000	(02)
விளையாட்டு உபகரணம்.	80000 (01)	8000 (01)	72000	
	395000	8000	387000	
நடைமுறை சொத்துக்கள்				
சிற்றுண்டிச்சாலை இருப்பு		10000 (01)		
கடன் பட்டோர்		30000 (01)		
பெற வேண்டிய சந்தா.		9000 (01)		
காசு	(05)	40000	89000	
			476000	
திரண்ட நிதி (270000+40000)	(02)	310000		
(+) மிகை.	(01)	29000	339,000	
ந.மு. அல்லாப் பொறுப்பு				
விளையாட்டு அரங்கு நிர்மாண நிதி			110000	(01)
நடைமுறைப் பொறுப்பு				
கடன் கொடுத்தோர்.	(01)	15000		
முற்பண சந்தா.	(03)	12000	27000	
			476000	

(20 Marks)

[மொத்தம் 30 புள்ளிகள்]

செய்கை

காசுக் க/கு

மீதி	25000 ✓	மின் கட்டணம்	7000 ✓
சந்தா.	66000 ✓	மைதான பராமரிப்பு	9000 ✓
சிற்றுண்டிச்சாலை வி/னை	60000 ✓	பந்து	12000 ✓
		ஏனைய செலவு	14000 ✓
வி.போட்டி இலாபம்	22000 ✓	மைதான நிர்மாணம்	40000 ✓
விளையாட்டரங்கு நன்கொடை	50000 ✓	சிற்றுண்டிச்சாலை கொள்வனவு	45000 ✓
		சிற்றுண்டிச்சாலை பொறுப்பாளர் சம்பளம்	24000 ✓
		உபகரண கொள்வனவு	20000 ✓
		வி.போட்டி செலவு	12000 ✓
		மீ/கீ	40000 ✓
	223000		223000.

✓ மொத்தம் 05 புள்ளிகள்.

சந்தா க/கு

மீதி	✓ 6000	மீதி	3000 ✓
வ/செ	✓ 60000	காசு	66000 ✓
மீ/கீ	✓ 12000	மீ/கீ	9000 ✓
	78000		78000

✓ 03 புள்ளிகள்.

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න

| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න